

ක්‍රීඩා හා යෞවන කටයුතු අමාත්‍යාංශය

விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு

Ministry of Sports and Youth Affairs

ජාතික ක්‍රීඩා අරමුදල

தேசிய விளையாட்டு நிதி

National Sports Fund

2021

වාර්ෂික වාර්තාව

வருடாந்த அறிக்கை

Annual Report

உள்ளடக்கம்

தொடர் இலக்கம்	விபரம்	பக்க இலக்கம்
01	அறிமுகம்	02
02	நோக்கு, பணிக்கூற்று	02
03	விளையாட்டு நிதியத்தின் கடமைப் பொறுப்புக்கள்	03
04	சட்டப் பின்னணி	04
05	விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு நிதி உதவி அளித்தல்	04
06	விளையாட்டுப் போட்டிகள் தொடர்பாக நிதி உதவி அளித்தல்	05
07	பயிற்றுவிப்பாளர்களின் பொருட்டு நிதியுதவியினை அளித்தல்	05
08	ஏனைய செலவினங்கள்	05
09	நன்றி நவிலல்	06
10	தேசிய விளையாட்டு நிதியத்தின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள்	07-21
11	கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை	22-29

தேசிய விளையாட்டு நிதியம்

வருடாந்த அறிக்கை - 2021

அறிமுகம்

தேசிய அரச பேரவையின் 1973 ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் இலக்கம் 22 தொடக்கம் 27 வரை காட்டப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப தாபிக்கப்பட்ட தேசிய விளையாட்டு நிதியம் 2007 ஆம் ஆண்டிலிருந்து விளையாட்டு அமைச்சின் பூரணமான மேற்பார்வையின் கீழ் செயற்பட்டது. வருடாந்தம் விளையாட்டு வீர வீராங்கனைகளின் போசணை நிலைமையினை மேம்படுத்துதல் மற்றும் விளையாட்டு இயலுமைகளை உயர்த்துவனை நோக்காகக் கொண்டு நிதியத்தின் பணிகள் முன்னெடுத்துச் செல்லப்பட்டன.

நோக்கு

விளையாட்டு வீர வீராங்கனைகளின் இயலுமைகளை விருத்தி செய்தல்

பணிக்கூற்று

இலங்கையில் விளையாட்டுக்களுக்கு ஊக்கமளித்தல், அவற்றினை முன்னேற்றுதல் மற்றும் அபிவிருத்தி செய்வதன் பொருட்டு உதவி மற்றும் ஒத்துழைப்பு வழங்கள் தேசிய விளையாட்டு நிதியத்தின் பணிக்கூற்றாகும்

தேசிய விளையாட்டு நிதியத்தின் கடமைப் பொறுப்புக்கள்

விளையாட்டு அமைச்சின் கீழ் செயற்படும் தேசிய விளையாட்டு நிதியத்தின் வாயிலாக இலங்கையின் விளையாட்டினது அபிவிருத்தியின் பொருட்டு விளையாட்டுடன் தொடர்புடைய மானிட வளங்களான விளையாட்டு வீர வீராங்கனைகள், பயிற்றுவிப்பாளர்கள் அவ்வாறே விளையாட்டுத்துறையின் பௌதீக மற்றும் வேறு உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தியின் பொருட்டு காணப்படும் நிதியேற்பாட்டின் கீழ் நிதியானது வழங்கப்படுதல் நிகழ்த்தப்படுகின்றது.

தற்காலத்தில் விளையாட்டு நிதியத்தின் வாயிலாக மேலே குறிப்பிட்ட பணிகள் தொடர்பாக காலத்திற்குப் பொருந்தும் விதமாக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதாவது சர்வதேசப் போட்டி வெற்றிகளின் பொருட்டு விளையாட்டு வீர வீராங்கனைகள் மற்றும் பயிற்றுவிப்பாளர்களுக்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள நியதிகளின் கீழ் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல், இனங்காணப்பட்டுள்ள நியதிகளின் கீழ் மாதாந்தம் வீரர்களின் பொருட்டு போசணைக் கொடுப்பனவுகளை வழங்குதல், விளையாட்டின் அபிவிருத்தியின் பொருட்டு பரிந்துரைக்கப்பட்ட விஷேட வேண்டுகோள்கள் தொடர்பாக வழங்கப்படும் கொடுப்பனவுகள், தேசிய விளையாட்டுப் பெருவிழாவின் பொருட்டு அனுசரணையினை வழங்குதல், தேசிய மற்றும் சர்வதேச பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் பொருட்டு மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகள், விஷேடத்துவமுடைய விளையாட்டு விழாக்களின் பொருட்டு மேற்கொள்ளப்படும் பரிசு அன்பளிப்புக்களை வழங்குதல், விஷேட அளிப்புக்கள் (அதாவது பல்கலைக்கழகங்கள் மற்றும் வேறு நிறுவனங்கள் தொடர்பாக நிகழ்த்தப்படும் விளையாட்டு விழாக்களின் பொருட்டான கொடுப்பனவுகள், விளையாட்டு வீரர்கள் ஓய்வுபெற்றுச் செல்லும்போது / விளையாட்டிலிருந்து விடைபெறும்போது மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகள், விஷேடத்துவமடைய விளையாட்டு உபகரணங்கள் தொடர்பாக விடுக்கப்படும் வேண்டுகோள்களுக்கு அனுசரணையினை வழங்குதல், தேசிய மற்றும் சர்வதேசப் போட்டிகள் தொடர்பாக பல்வேறுபட்ட அணிகளின் பொருட்டு மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகள், கருணை அடிப்படையிலான காரணங்களுக்காக விளையாட்டுடன் தொடர்புடைய நபர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் மற்றும் விளையாட்டு அபிவிருத்தியினை எதிர்பார்த்து மேற்கொள்ளப்படும் வேறு கொடுப்பனவுகள் என்பனவாகும்).

சட்டப் பின்னணி

தேசிய அரச பேரவையின் 1973 ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தினால் தேசிய விளையாட்டு நிதியம் தாபிக்கப்பட்டது. சட்டத்தின் பிரகாரம் நிதியத்தின் பணிகள் தொடர்பாக அரசாங்கத்திடமிருந்து கிடைக்கப்பெறக்கூடிய நிதி, வெளிநாடொன்றிலிருந்து கிடைக்கப்பெறும் உதவி நிதி, யாதேனும் விளையாட்டு அல்லது விளையாட்டு விழா தொடர்பாக அனுசரணையினை வழங்குதலின் பொருட்டு யாதேனும் நிறுவனத்திடமிருந்து கிடைக்கப்பெறும் நிதி, யாரேனும் நபர் ஒருவரிடமிருந்து நன்கொடையாக கிடைக்கப்பபெறும் நிதி, வேறு யாதேனும் வழிகளால் கிடைக்கப்பெறும் நிதிகள் இந்நிதியத்திற்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும். அமைச்சரினால் தீர்மானிக்கப்படக் கூடிய நிதியளவுகள் இலங்கையில் யாதேனும் விளையாட்டொன்றிற்கு ஊக்கமளித்தல், முன்னேற்றுதல் மற்றும் அபிவிருத்தி செய்தலின் பொருட்டும் விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு கருணை அடிப்படையிலான கொடுப்பனவுகளாகவும், முதலீடு செய்வதன் பொருட்டும் இச் சட்டத்தின் ஏற்பாடுகளை அமுல்படுத்தும் அல்லது வலுப்படுத்தும் பணிகளின் பொருட்டும் நிதியத்தினால் பணத்தினைக் கொடுப்பனவு செய்ய முடியும்.

விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு நிதி உதவி அளித்தல்

தற்போது விளையாட்டில் ஈடுபட்டுள்ள தேசியமட்ட விளையாட்டு வீர வீராங்கனைகளின் மனத்திடத்தினை விருத்தி செய்வதற்கும் மற்றும் உடற்றகைமையினை உகப்பான மட்டத்தில் பேணிச் செல்லுவதனை இலக்காகக் கொண்டும் நிதியுதவியானது அளிக்கப்பட்டது.

தொடர் இலக்கம்	விடயம்	கொடுப்பனவு செய்யப்பட்ட தொகை (ரூ.)
1.	விளையாட்டு வீரர்கள் தொடர்பாக போசணைக் கொடுப்பனவு	8,215,107.00
2.	முன்னாள் விளையாட்டு வீர வீராங்கனைகள் தொடர்பான கொடுப்பனவு	631,898.00
	மொத்தம்	**8,847,005.00**

விளையாட்டுப் போட்டிகள் தொடர்பாக நிதி உதவி அளித்தல்

2021 ஆம் வருடத்தினுள் இலங்கையினுள் நடாத்தப்பட்ட தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகள் தொடர்பாக தேசிய விளையாட்டு நிதியத்தின் பங்களிப்பானது கீழே தரப்பட்டுள்ளது.

தொடர் இலக்கம்	விடயம்	கொடுப்பனவு செய்யப்பட்ட தொகை (ரூ.)
1.	சர்வதேசப் போட்டிகள்	108,145,941.00
	மொத்தம்	**108,145,941.00**

பயிற்றுவிப்பாளர்களுக்கு நிதி உதவி அளித்தல்

தற்போது விளையாட்டில் ஈடுபட்டுள்ள தேசியமட்ட விளையாட்டு வீர வீராங்கனைகளின் ஆற்றுகையினை விருத்தி செய்து தேசிய விளையாட்டுத்துறையினை உயர்த்தும் நோக்கில் நிறைவேற்றிய சேவையின் பொருட்டு நிதியுதவியானது அளிக்கப்பட்டது.

தொடர் இலக்கம்	விடயம்	கொடுப்பனவு செய்யப்பட்ட தொகை (ரூ.)
1.	பயிற்றுவிப்பாளர்கள் தொடர்பாகக் கொடுப்பனவு	940,000.00
	மொத்தம்	**940,000.00**

ஏனைய செலவினங்கள்

2021 ஆம் வருடத்தினுள் தேசிய விளையாட்டு நிதியத்திலிருந்து கௌரவ விளையாட்டு அமைச்சர் அவர்களது அனுமதியின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட ஏனைய செலவினங்களின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

தொடர் இலக்கம்	விடயம்	கொடுப்பனவு செய்யப்பட்ட தொகை (ரூ.)
1	நிர்வாகச் செலவினங்கள் (தேசிய விளையாட்டு நிதியத்தின் கணக்கு நடவடிக்கைகள் தொடர்பாக)	363,500.00
2	மேன்முறையீட்டு ஆலோசனைக் குழு	212,258.00
3	தேசிய விளையாட்டுச் சபை	350,190.00
4	ஏனைய கொடுப்பனவுகள்	10,118,170.00
5	கணக்காய்வுக் கட்டணம்	150,000.00
	மொத்தம்	**11,194,118.00**

நன்றி நவிலல்

தேசிய விளையாட்டு நிதியத்தின் பணிகளை முன்னெடுத்துச் செல்லும்போது கௌரவ விளையாட்டு அமைச்சர் அவர்களின், விளையாட்டு அமைச்சின் உத்தியோகத்தர்களது மற்றும் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களது பங்குபற்றுதலினை மிக மேன்மையானதாகக் கருதுகின்றேன்.

K. மகேசன்
செயலாளர்
விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு

தேசிய விளையாட்டு நிதியம்

2021 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடம் தொடர்பாக நிதிச் செயலாற்றுகைக் கூற்று

ரூ.

பாதீடு 2021		குறிப்பு	உண்மை நிலை 2021	2020 மீளளிக்கப்பட்ட
-	**வருமானப் பெறுகைகள்**			-
177,125,000	1 - அரசாங்க நன்கொடைகள்	**3.1**	190,020,300	42,849,536
32,300,000	2 - முதலீடு	**3.2**	1,154,400	2,249,457.04
27,400,000	3 - ஏனைய வருமானங்கள்	**3.3**	21,474,415	2,452,750.00
236,825,000	**மொத்த வருமானப் பெறுகைகள்**		212,649,115	47,551,743.04
-	**வருமானமற்றப் பெறுகைகள்**		-	-
300,000	4 - வைப்புகள்	**3.4**		377,000
-	ஏனைய பெறுகைகள்			
300,000	**மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள்**		-	**377,000**
237,125,000	**மொத்த வருமானப் பெறுகைகள் மற்றும்**		**212,649,115**	**47,928,743**
	கழி : செலவினம்			
-	**மீண்டுவரும் செலவினம்**			
35,800,000	5.1. - முதலீடு			
111,000,000	6.1. - விளையாட்டுப் போட்டிகள்	**4.1**	108,145,941	5,786,000
10,095,000	6.2. - நலன்புரிக் கொடுப்பனவுகள்	**4.2**	9,787,005	100,216,339
	6.3. - அபிவிருத்தி செயற்றிட்டம்	**4.4**		

1,000,000				
74,875,000	6.4. - இயலுமை விருத்தி	4.3	71,055,500	-
1,209,000	6.5 - நிர்வாகச் செலவினம்	4.4	11,194,117	21,715,146
233,979,000	**மொத்த மீண்டுவரும் செலவினம்**		**200,182,563**	**127,717,485**
	மொத்த செலவினம்		200,182,563	127,717,485
3,146,000	**2021 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மிகை / பற்றாக்குறை**		12,466,552	(79,788,742)

.....

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:
பதவி :
திகதி :

.....

பிரதான கணக்காளர்
பெயர் :
திகதி :

தேசிய விளையாட்டு நிதியம்
2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	2021	2020 மீளளிக்கப்பட்ட
		ரூ.	ரூ.
சொத்துக்கள்			

நிதி சொத்துக்கள்			
முதலீட்டுக் கணக்கு	5	16,089,059	14,645,465
நிதி நிலுவை	6	15,787,820	17,013,369
பல்வகைக் கடன்படுநர்	7	30,270,897	17,969,886
மொத்த சொத்துக்கள்		62,147,776	49,628,721
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்			
திரண்ட நிதியம்	8	61,608,273	49,141,721
நடைமுறைப் பொறுப்புக்கள்			
நானாவித வைப்புகள்	9	330,000	340,000
திரட்டிய செலவினம்	10	209,503	147,000
நடைமுறைப் பொறுப்புக்கள்		539,503	487,000
மொத்தப் பொறுப்புக்கள்		62,147,776	49,628,721

பக்க இலக்கம் ....01... முதல் ...03.. வரை கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகள் பக்க இலக்கம் ...04.... முதல் ...11.... வரை உள்ளடங்கியுள்ள கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதிகளாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலே இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அதற்கு ஏற்புடைய கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் கணக்குப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது எனவும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்தின் பொருட்டு விளைதிறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்தின் பொருட்டு உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை விளைதிறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

.....	.....
பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்	பிரதான கணக்காளர்
பெயர்:	பெயர் :
பதவி :	திகதி :
திகதி :	

தேசிய விளையாட்டு நிதியம்
2021 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
காசுப் பாய்ச்சல் கூற்று

	உண்மை	
	2021	2020
	ரூபா	ரூபா
வருடத்தின் மிகை	12,466,552	(79,788,742)
	12,466,552	(79,788,742)
முதலீட்டு வட்டியினை மேலதிகமாகக் கணக்கிடல்		(484,168)
கணக்காய்வு கட்டணத்தினை மேலதிகமாக ஒதுக்கீடு செய்தல்		
நிதியல்லாத மாற்றங்கள்	-	(484,168)
	-	
<u>தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்</u>	-	
கடன்படுநர் குறைவடைதல் / அதிகரித்தல்	12,301,010	7,419,611
பல்வேறுபட்ட வைப்புக்கள் குறைவடைதல் / அதிகரித்தல்	(10,000)	(465,000)
பல்வேறுபட்ட கடன்பட்டோர் குறைவடைதல் / அதிகரித்தல்	(62,503)	(653,000)
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்	12,228,507	6,301,611
<u>முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்</u>		
நிலையான வைப்புக்கள் அதிகரித்தல்	(1,443,594)	70,825,109
முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்	(1,443,594)	70,825,109
நிதி மற்றும் நிதிக்குச் சமானமானவற்றின் தேறிய அதிகரிப்பு	(1,225,549)	(3,146,189)
காலப்பகுதியின் ஆரம்பத்தில் நிதி மற்றும் நிதிக்குச் சமானமானவை	17,013,369	20,159,558
காலப்பகுதியின் இறுதியில் நிதி மற்றும் நிதிக்குச் சமானமானவை	15,787,820	17,013,369

.....	.....
பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்	பிரதான கணக்காளர்
பெயர்:	பெயர் :
பதவி :	திகதி :
திகதி :	

நிதிக் கூற்றுகள் தொடர்பாகக் குறிப்புகள்

1 அறிமுகம்

தேசிய அரச பேரவையின் 1973 ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் இலக்கம் 22 தொடக்கம் 27 வரையுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் தாபிக்கப்பட்ட தேசிய விளையாட்டு நிதியம் 2007 ஆம் ஆண்டிலிருந்து விளையாட்டு அமைச்சின் பூரணமான மேற்பார்வையின் கீழ் செயற்பட்டது. வருடாந்தம் விளையாட்டு வீர வீராங்கனைகளின் போசணை நிலைமையினை மேம்படுத்துதல் மற்றும் விளையாட்டு இயலுமைகளை உயர்த்துவனை நோக்காகக் கொண்டு நிதியத்தின் பணிகள் முன்னெடுத்துச் செல்லப்பட்டன.

2 கணக்குகளைத் தயாரிப்பதற்கான அடிப்படை

2.1 இணக்கப் பிரகடனம்

விளையாட்டு நிதியத்தின் நிதிக் கூற்றுக்கள், நிதிச் செயலாற்றுகைக் கூற்று, நிதி நிலைமை தொடர்பான கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இலங்கை பொதுக் கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

2.2 நிதிக் கூற்றுக்களிலுள்ள இலக்கங்கள் இலங்கை ரூபாயில் கிட்டிய ரூபாய்க்கு தயாரிக்கப்பட்டுள்ளன.

2.3 அறிக்கையிடும் காலப்பகுதி

2021 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து 2021 டிசம்பர் 31 வரையிலான காலப்பகுதியானது இந் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்புடைய அறிக்கையிடும் காலப்பகுதியாகும்.

2.4 நிதிக் கூற்றுக்களின் முந்தைய வருடப் பெறுமானங்களின் ஒப்பீட்டு மறுசீரமைப்பு

2.4.1 2020 இல் அடையாளம் காணப்பட்ட வித்தியாசங்கள் 2020 கணக்குகளுடன் ஒப்பிடப்பட்டு சரிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டு மீண்டும் கூறப்பட்டுள்ளன.

2.4.2 2021 ஆம் ஆண்டு சனவரியிலிருந்து செலவு விடயங்களின் குறியீட்டு இலக்கங்கள் மற்றும் வருமானக் கணக்குகளின் குறியீட்டு இலக்கங்கள் மாற்றப்பட்டுள்ளதுடன் அப் படிவங்களில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களுக்கு ஏற்ப 2020 ஆம் வருடம் தொடர்பாகவான புள்ளி விபரங்கள் ஒப்பிடப்பட்டு புதிய விடயங்கள் மற்றும் வருமானக் குறியீடுகளுக்கு சரிசெய்யப்பட்டுள்ளன.

2.5 திரட்டல் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன

3 வருமானம் கிடைக்கப்பெறல் தொடர்பாகக் குறிப்புகள்

குறிப்பு 03.1 - அரசாங்க நன்கொடைகள்

வருமானக் குறியீடு		கணக்கின் பெயர் மற்றும் விபரம்	வருமானம் 2021 ரூ. சதம்	2020 வருமானம் ரூ. சதம்
1		அரசாங்க நன்கொடைகள்		
1	1	நன்கொடைகள்	177,125,000	32,500,000
1	2	வருமானம் – தேசிய லொத்தர் சபை	-	10,349,536
			177,125,000	**42,849,536**

குறிப்பு 03.2 - முதலீடு

வருமானக் குறியீடு		கணக்கின் பெயர் மற்றும் விபரம்	வருமானம் 2021 ரூ. சதம்	2020 வருமானம் ரூ. சதம்
2		முதலீடு		
2	1	நிலையான வைப்பினை மீளப்பெறல்		
2	2	நிலையான வைப்பு மீதான வட்டி	-	2,249,457
			-	**2,249,457**

குறிப்பு 03.3 - ஏனைய வருமானங்கள்

வருமானக் குறியீடு		கணக்கின் பெயர் மற்றும் விபரம்	வருமானம் 2021 ரூ. சதம்	2020 வருமானம் ரூ. சதம்
3		ஏனைய வருமானங்கள்		
3	1	தியகம மகிந்த ராஜபக்ஷ விளையாட்டுப் பல்கட்டடத் தொகுதி		635,200
3	2	அனுசரணைப் பெறுகைகள்	20,875,000	
3	3	ஏனைய வருமானத்துடன் சரிசெய்தல்	599,415	1,817,550

				21,474,415	**2,452,750**

குறிப்பு 03.4 - வைப்புகள்

வருமானக் குறியீடு			கணக்கின் பெயர் மற்றும் விபரம்	வருமானம் 2021 ரூ. சதம்	2021 வருமானம் ரூ. சதம்
4			வைப்புகள்		
4	1		வைப்புப் பெறுகைகள்		377,000
4	2		ஏனைய		
				-	**377,000**

4 செலவினங்கள் செலுத்தப்படுதல் தொடர்பான குறிப்புகள்

குறிப்பு 4.1 - விளையாட்டுப் போட்டிகள்

செலவினக் குறியீடு				கணக்கின் பெயர் மற்றும் விபரம்	வருமானம் 2021 ரூ. சதம்	2020 வருமானம் ரூ. சதம்
6	1			விளையாட்டுப் போட்டிகள்		
6	1	1		உள்நாட்டுப் போட்டித் தொடர்கள்		100,000
6	1	2		சர்வதேசப் போட்டித் தொடர்கள்	108,145,941	5,250,000
				தேசிய விளையாட்டு விழா	-	436,000
					108,145,941	**5,786,000**

குறிப்பு 4.2 - நலன்புரிக் கொடுப்பனவுகள்

செலவினக் குறியீடு				கணக்கின் பெயர் மற்றும் விபரம்	வருமானம் 2021 ரூ. சதம்	2020 வருமானம் ரூ. சதம்
6	2			நலன்புரிக் கொடுப்பனவு		
6	2	1		விளையாட்டு வீர வீராங்கனைகள் தொடர்பாக		
6	2	1	1	விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கான போசணைக் கொடுப்பனவு	8,215,107	2,160,000

6	2	1	2	முன்னால் விளையாட்டு வீர வீராங்கனைகளின் பொருட்டான கொடுப்பனவு	631,898	350,000
				விளையாட்டு வீரர்கள் தொடர்பாக மருத்துவ உதவி		138,690
				விளையாட்டுப் பொருட்கள் மற்றும் ஏனைய வழங்கல்கள்		5,000,000
				விளையாட்டு வீரர்கள் தொடர்பாக உபகாரமளிப்பு		92,567,649
6	2	2		பயிற்றுவிப்பாளர் தொடர்பாக		
6	2	2	1	பயிற்றுவிப்பாளர் தொடர்பாகக் கொடுப்பனவு	940,000	
6	2	2	2	பயிற்றுவிப்பாளர் தொடர்பாக ஏனைய செலவினங்கள்		
					9,787,005	**100,216,339**

குறிப்பு 4.3 - இயலுமை விருத்தி

செலவினக் குறியீடு				கணக்கின் பெயர் மற்றும் விபரம்	வருமானம் 2021 ரூ. சதம்	2020 வருமானம் ரூ. சதம்
6	4			செயலாற்றுகை		
6	4	1		விளையாட்டு வீரர்களின் இயலுமை விருத்தி	55,655,500	
6	4	2		பயிற்றுவிப்பாளர்களின் இயலுமை விருத்தி	15,400,000	
6	4	3		உத்தியோகத்தர்களின் இயலுமை விருத்தி		
					71,055,500	

குறிப்பு 4.4 - நிர்வாகச் செலவினம்

செலவினக் குறியீடு				கணக்கின் பெயர் மற்றும் விபரம்	வருமானம் 2021 ரூ. சதம்	2020 வருமானம் ரூ. சதம்
6	5			நிர்வாகச் செலவினம்		
6	5	1		பொது நிர்வாகச் செலவினம்		
6	5	1	1	உத்தியோகத்தர்கள் தொடர்பாக நிர்வாகக் கொடுப்பனவு	363,500	648,000
6	5	1	2	கணக்காய்வுக் கட்டணம்	150,000	348,640
6	5	1	3	வைப்புக் கொடுப்பனவுகள்		
6	5	1	4	ஏனைய	10,118,170	423,333

				எரிபொருள் முற்பணம்		206,316
				நானாவித முற்பணம்		110,960
				தியகம மகிந்த ராஜபக்ச விளையாட்டுப் பல்கட்டடத் தொகுதி செலவினம்		9,860,385
				நானாவிதக் கொடுப்பனவுகள்		10,117,512
6	5	2		விளையாட்டு நிர்வாகச் செலவினம்		
6	5	2	1	மேன்முறையீட்டு ஆலோசனைக் குழு	212,258	
6	5	2	2	தேசிய விளையாட்டுச் சபை	350,190	
					11,194,117	**21,715,146**

5 முதலீடு

விபரம்	2021 ரூ. சதம்	2020 ரூ. சதம்
ஆரம்ப நிலுவை	14,645,465	85,470,575
வருடத் தொகுப்பு	32,000,000	10,000,000
வருடத்தில் அகற்றுதல்	32,000,000	85,355,176
வட்டி	1,443,594	4,530,066
இறுதி நிலுவை	**16,089,059**	**14,645,465**

6 காசுப் பாய்ச்சல் தொடர்பாக குறிப்பு

விபரம்	2021 ரூ. சதம்	2020 ரூ. சதம்
ஆரம்ப நிலுவை	17,013,369	20,159,559
வருடப் பெறுகைகள்	231,208,061	139,401,890
வருடத்தில் கொடுப்பனவு	232,433,610	142,548,079
இறுதி நிலுவை	**15,787,820**	**17,013,369**

7 பல்வகைக் கடன்படுநர்

குறிப்பு 7.1 - தேசிய லொத்தர் சபை

விபரம்	2021 ரூ. சதம்	2020 ரூ. சதம்
ஆரம்ப நிலுவை	16,526,293	19,361,917
வருட வருமானம்	12,895,300	10,349,536
சரிசெய்தல்		1,814,840
திறைசேரியிலிருந்து கிடைப்பனவு	-	15,000,000
இறுதி நிலுவை	**29,421,593**	**16,526,293**

குறிப்பு 7.2 - நிலையான வைப்பு வட்டி

விபரம்	2021 ரூ. சதம்	2020 ரூ. சதம்
ஆரம்ப நிலுவை	1,443,594	4,212,740
வருட வட்டி	1,109,881	2,249,457
வருடத்தில் அகற்றுதல்	-	
இறுதி நிலுவை	**849,304**	**1,443,594**

8 உரிமையாண்மை மாற்றமடைதலின் கூற்று

விபரம்	2021 ரூ. சதம்	2020 ரூ. சதம்
2021.01.01 ஆம் திகதிக்கு திரண்ட நிதியம்	49,141,721	129,414,630
2021 ஆம் வருடத்தில் பற்றாக்குறை / மிகை	12,466,552	(79,788,741)
ஏனைய சரிப்படுத்தல்கள்	-	(484,168)
2021.12.31 ஆம் திகதிக்கு திரண்ட நிதியம்	**61,608,273**	**49,141,721**

9 நானாவித வைப்புகள்

விபரம்	2021 ரூ. சதம்	2020 ரூ. சதம்
ஆரம்ப நிலுவை	340,000	805,000
வருடப் பெறுகைகள்	-	150,000
வருடத்தில் கொடுப்பனவு	10,000	615,000
இறுதி நிலுவை	**330,000**	**340,000**

10 திரட்டிய செலவினம்

விபரம்	2021 ரூ. சதம்	2020 ரூ. சதம்
ஆரம்ப நிலுவை	147,000	800,000
வருடத் தொகுப்பு	209,503	147,000
வருடத்தில் கொடுப்பனவு	147,000	800,000
இறுதி நிலுவை	**209,503**	**147,000**

.....

பிரதான கணக்காளர்

பெயர் :

திகதி :

இணைப்பு - 01

தேசிய விளையாட்டு நிதியம்

2021.12.31 இல் முடிவடைந்த வருடம் தொடர்பாக நிலுவை வெளிப்பாடுகள்

செலவு விடயம்				கணக்கின் பெயர் மற்றும் விபரம்	பற்று	வரவு
					ரூ	ரூ
				திரண்ட நிதியம் - 2021.01.01 ஆம் திகதிக்கு		49,141,721
				முதலீட்டுக் கணக்கு	16,089,059	
1	1			நன்கொடைகள்		177,125,000
1	2			வருமானம் - தேசிய லொத்தர் சபை		

1	2			கிடைக்கப்பெற வேண்டிய வருமானங்கள் 2021.01.01 ஆம் திகதிக்கு - தேசிய லொத்தர் சபை	16,526,293	
2	1			நிலையான வைப்பினை மீளப்பெறல்		
2	2			நிலையான வைப்பு மீதான வட்டி		1,154,400
2	2			கிடைக்கப்பெற வேண்டிய நிலையான வைப்பு வட்டி	849,304	
3	1			தியகம மகிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கு		
3	2			அனுசரணைப் பெறுகைகள்		20,875,000
3	3			ஏனைய வருமானங்களுடன் சரிசெய்தல்		
4	1			வைப்புக் கணக்கு		330,000
4	2			ஏனைய		599,415
5	1			முதலீட்டுத் திட்டம்		
6	1	1		உள்நாட்டுப் போட்டித் தொடர்கள்		
6	1	2		சர்வதேசப் போட்டிகள்	108,145,941	
6	2	1	1	விளையாட்டு வீரர்களுக்கான போசணைக் கொடுப்பனவு	8,215,107	
6	2	1	2	முன்னால் விளையாட்டு வீர வீராங்கனைகளின் பொருட்டான கொடுப்பனவு	631,898	
6	2	2	1	பயிற்றுவிப்பாளர் தொடர்பாகக் கொடுப்பனவு	940,000	
6	2	2	2	பயிற்றுவிப்பாளர் தொடர்பாக ஏனைய செலவினங்கள்		
6	3	1		விளையாட்டு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்		
6	4	1		விளையாட்டு வீரர்களின் இயலுமை விருத்தி	55,655,500	
6	4	2		பயிற்றுவிப்பாளர்களின் இயலுமை விருத்தி	15,400,000	
6	4	3		உத்தியோகத்தர்களின் இயலுமை விருத்தி		
6	5	1	1	உத்தியோகத்தர்கள் தொடர்பாக நிர்வாகக் கொடுப்பனவு	363,500	
6	5	1	2	கணக்காய்வுக் கட்டணம்	150,000	
6	5	1	2	கணக்காய்வுக் கட்டண ஒதுக்கீடு		150,000
6	5	1	3	வைப்புக் கொடுப்பனவு		
6	5	1	4	ஏனைய	10,118,170	
6	5	1	4	ஏனைய - கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய		59,503
6	5	2	1	மேன்முறையீட்டு ஆலோசனைக் குழு	212,258	
6	5	2	2	தேசிய விளையாட்டுச் சபை	350,190	
				நிதி நிலுவை	15,787,820	
					249,435,039	**249,435,039**

.....

பிரதான கணக்காளர்

பெயர் :

திகதி :

இணைப்பு - 02

தேசிய விளையாட்டு நிதியம்

2021.12.31 இல் முடிவடைந்த வருடம் தொடர்பாக கிடைப்பனவு கொடுப்பனவுக் கணக்கு

செலவு விடயம்				கணக்கின் பெயர் மற்றும் விபரம்	கிடைப்பனவு 2021	கிடைப்பனவு 2021
					ரூ	ரூ
				சனவரி 01 ஆம் திகதியன்று நிலுவை		17,013,369
1	1			நன்கொடைகள்	177,125,000	
1	2			வருமானம் – தேசிய லொத்தர் சபை		
2	1			நிலையான வைப்புக்களை மீள எடுத்தல்	32,000,000	
2	2			நிலையான வைப்புகளுக்கான வட்டி	305,096	
3	1			தியகம மகிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கு		
3	2			அனுசரணைக் கிடைப்பனவு	20,875,000	
3	3			ஏனைய வருமானங்களுடன் சரிசெய்தல்	902,965	
4	1			வைப்புப் பெறுகைகள்		
4	2			ஏனைய		
				கிடைப்பனவு மொத்தம்	**231,208,061**	**248,221,430**

செலவு விடயம்				கணக்கின் பெயர் மற்றும் விபரம்	2021 கொடுப்பனவு	2021 கொடுப்பனவு
5	1			முதலீட்டுத் திட்டங்கள்	32,000,000	
6	1	1		உள்நாட்டுப் போட்டித் தொடர்கள்		
6	1	2		சர்வதேச போட்டிகள்	108,145,941	
6	2	1	1	விளையாட்டு வீரர்களின் போசணைக் கொடுப்பனவு	8,215,157	
6	2	1	2	முன்னால் விளையாட்டு வீர வீராங்கனைகளின் பொருட்டான கொடுப்பனவு	631,898	
6	2	2	1	பயிற்றுவிப்பாளர் தொடர்பாகக் கொடுப்பனவு	940,000	
6	2	2	2	பயிற்றுவிப்பாளர் தொடர்பாக ஏனைய செலவினங்கள்		
6	3	1		விளையாட்டு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்		
6	4	1		விளையாட்டு வீரர்களின் இயலுமை விருத்தி		

					55,955,500	
6	4	2		பயிற்றுவிப்பாளர்களின் இயலுமை விருத்தி	15,400,000	
6	4	3		உத்தியோகத்தர்களின் இயலுமை விருத்தி		
6	5	1	1	உத்தியோகத்தர்கள் தொடர்பாக நிர்வாகக் கொடுப்பனவு	367,000	
6	5	1	2	கணக்காய்வுக் கட்டணம்	147,000	
6	5	1	3	வைப்புக் கொடுப்பனவு	10,000	
6	5	1	4	ஏனைய	10,058,667	
6	5	2	1	மேன்முறையீட்டு ஆலோசனைக் குழு	212,258	
6	5	2	2	தேசிய விளையாட்டுச் சபை	350,190	
				மொத்தம்		**232,433,610**
				டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிதி நிலுவை	-	**15,787,820**

.....
பிரதான கணக்காளர்
பெயர் :
திகதி :

இணைப்பு - 03

தேசிய விளையாட்டு நிதியம்
2021.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடம் தொடர்பாக வருமானம் மற்றும் செலவினக் கணக்கு

செலவு விடயம்				கணக்கின் பெயர் மற்றும் விபரம்	வருமானம் 2021	வருமானம் 2021
					ரூ	ரூ
1	1			நன்கொடைகள்	177,125,000	
1	2			வருமானம் – தேசிய லொத்தர் சபை	12,895,300	
2	1			நிலையான வைப்புக்களை மீள எடுத்தல்		
2	2			நிலையான வைப்பு மீதான வட்டி	1,154,400	
3	1			தியகம மகிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கு		
3	2			அனுசரணைப் பெறுகைகள்	20,875,000	
3	3			ஏனைய வருமானங்களுடன் சரிசெய்தல்	599,415	

4	1			வைப்புப் பெறுகைகள்		
4	2			ஏனைய		
				மொத்த வருமானம்		212,649,115

செலவு விடயம்				கணக்கின் பெயர் மற்றும் விபரம்	2021 செலவினம்	2021 செலவினம்
5	1			முதலீட்டுத் திட்டங்கள்		
6	1	1		உள்நாட்டுப் போட்டித் தொடர்கள்		
6	1	2		சர்வதேச போட்டிகள்	108,145,941	
6	2	1	1	விளையாட்டு வீரர்களுக்கான போசணைக் கொடுப்பனவு	8,215,107	
6	2	1	2	முன்னால் விளையாட்டு வீர வீராங்கனைகளின் பொருட்டான கொடுப்பனவு	631,898	
6	2	2	1	பயிற்றுவிப்பாளர் தொடர்பாகக் கொடுப்பனவு	940,000	
6	2	2	2	பயிற்றுவிப்பாளர் தொடர்பாக ஏனைய செலவினங்கள்		
6	3	1		விளையாட்டு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்		
6	4	1		விளையாட்டு வீரர்களின் இயலுமை விருத்தி	55,655,500	
6	4	2		பயிற்றுவிப்பாளர்களின் இயலுமை விருத்தி	15,400,000	
6	4	3		உத்தியோகத்தர்களின் இயலுமை விருத்தி		
6	5	1	1	உத்தியோகத்தர்கள் தொடர்பாக நிர்வாகக் கொடுப்பனவு	363,500	
6	5	1	2	கணக்காய்வுக் கட்டணம்	150,000	
6	5	1	3	வைப்புக் கொடுப்பனவு		
6	5	1	4	ஏனைய	10,118,170	
6	5	2	1	மேன்முறையீட்டு ஆலோசனைக் குழு	212,258	
6	5	2	2	தேசிய விளையாட்டுச் சபை	350,190	
				தேசிய விளையாட்டு விழா		
				மொத்தம்		200,182,563
				மிகை	-	12,466,552

.....
பிரதான கணக்காளர்
பெயர் :
திகதி :

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

SYA/A/NSF/6/21/11 2022 நவம்பர் 11 ஆம் திகதி

செயலாளர்,

விளையாட்டுக்கள் மற்றும் இளைஞர் விவகார அமைச்சு

தேசிய விளையாட்டு நிதியத்தின் 2021 டிசம்பர் 31 ஆம் தினத்திற்கு நிறைவுற்ற வருடம் தொடர்பாகவான நிதிக்கூற்றுக்கள் மற்றும் வேறு சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை.

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

தேசிய விளையாட்டு நிதியத்தின் 2021 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிதி நிலைமைக் கூற்றுக்கள் மற்றும் அத்தினத்தில் முடிவடையும் வருடம் தொடர்பாகவான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, மற்றும் அத்தினம் நிறைவடையும் வருடம் தொடர்பாக காசுப்பாய்ச்சற் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்புடைய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளை உள்ளடக்கிய 2021 டிசம்பர் 31 ஆம் தினத்திற்கு முடிவடையும் வருடம் தொடர்பாகவான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (1) உறுப்புரை, 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் எனது கட்டளையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154 (6) உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

தேசிய விளையாட்டு நிதியத்தின் நிதிக்கூற்றுக்களின் வாயிலாக 2021 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிதி நிலைமை மற்றும் அத் தினத்திற்கு முடிவடையும் வருடம் தொடர்பாக அதன் நிதிச் செயற்படுதன்மை மற்றும் காசுப்பாய்ச்சல் இலங்கையின் பொதுக் கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப உண்மையான மற்றும் நியாயமான நிலைமையொன்றினை பிரதிபலிக்கும் என்பது நான் கொள்ளும் அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) ஏற்ப என்னால் கணக்காய்வானது மேற்கொள்ளப்பட்டது. இக் கணக்காய்வு நியமங்களின் கீழ் எனது பொறுப்புக்கள், இவ் அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்தின் பொருட்டு அடிப்படையொன்றினை வழங்கும் நோக்கில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வு சான்றுகள் போதுமானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் ஆளும் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கையின் பொதுத்துறையின் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமான ரீதியில் சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுகளின்றி நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுவதன் பொருட்டு அவசியமாக அமையப்பெறும் உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தினை தொடர்ந்தேர்ச்சியாக நடாத்திச் செல்லும் இயலுமையினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாவதுடன், முகாமைத்துவம் நிதியத்தினை கலைப்பதற்கு எண்ணுமாயின் அல்லது வேறு மாற்றுவழி இல்லாத போது செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கையினை மேற்கொண்டாலேயொழிய தொடர்ச்சியாக நிலவும் அடிப்படையின் கீழ் கணக்கு வைத்தல் மற்றும் நிதியத்தின் தொடர்ச்சியான நிலைத்திருக்கைக்கு ஏற்புடைய விடயங்களை வெளிப்படுத்துதலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயற்றொடர் சம்மந்தமாக பரிசோதனை செய்யும் பொறுப்பு, ஆளும் தரப்பினரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16 (1) உப பிரிவின் பிரகாரம், நிதியத்தின் வருடாந்த மற்றும் காலாகால நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமானதாகுமாறு சொந்த வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக ஏற்றவிதமாக புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படுதல் வேண்டும்.

1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

பொதுவாக நிதிக் கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதென நியாயமான உறுதிப்பாடொன்றினை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடங்கிய கணக்காய்வாளரின் அறிக்கையினை வெளியிடுதல் எனது நோக்கமாகும். நியாயமான உறுதி வழங்குகை உயர்ந்த மட்டத்திலான உறுதி

வழங்குகையாயினும், இலங்கை பொதுக் கணக்காய்வு நியமங்களுக்கு ஏற்ப கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அவை எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பொருண்மையான வழுக் கூற்றுக்களை வெளிப்படுத்திக் கொள்ளும் என்ற உறுதிப்படுத்தப்படுதலாக ஆகப் பெறாது. மோசடிகளின் மற்றும் தவறுகளின் தனி அல்லது கூட்டானதான தாக்கத்தினால் பொருண்மையான வழுக்கூற்றுக்கள் ஏற்படக் கூடியதுடன், அதன் பொருண்மைத் தன்மையானது இந் நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பரிசோதகர்களால் எடுக்கப்படும் பொருளாதாரத் தீர்மானங்களின் மீது ஏற்படக் கூடிய தாக்கங்களில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமயங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்ரீதி மத்தியத்துவம் மற்றும் தொழில்ரீதி சிக்கனத்துடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படை ஒன்றை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை இனங்காணல் மற்றும் மதிப்பாய்வு செய்தலின் பொருட்டு சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான உகந்த கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுதலின் காரணமாக நிகழும் பொருண்மையான கூற்றுக்களினால் நிகழக்கூடிய தாக்கங்களை விட மோசடிகளால் நிகழும் தாக்கம் பாரியதாவதாக அமைவது, அவை உள்கூட்டுக்கள், போலியான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே தவிர்த்தல், பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்த்தல் போன்ற காரணிகளாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் பயனுறுதி தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றினை வெளியிட எண்ணாவிடினும், சந்தர்ப்பத்திற்கு ஏற்ற விதமாக உகந்த கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடலின் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக விளக்கமொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் பொருத்தமான தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயபூர்வ தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புபட்ட வெளிப்படுத்தல்கள் மதிப்பாய்வு செய்யப்பட்டன.

- சம்பவங்கள் அல்லது நிலைமைகளின் காரணமாக நிதியத்தின் தொடர்ச்சியான நிலவுகை தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை இருக்கின்றதா என்பது சம்பந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளின் மீது அடிப்படையாக கணக்கீடு தொடர்பாக நிதியத்தின் தொடர்ச்சியான நிலவுகை பற்றி அடிப்படையினை ஈடுபடுத்திக் கொள்ளுதலின் ஏற்புடைத் தன்மை தீர்மானிக்கப்பட்டது. போதுமானளவு நிச்சயமற்ற தன்மை உள்ளதாக நான் முடிவு செய்வேனாயின் நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பாகவான வெளிப்படுத்தல்களுக்கு என்னுடைய கணக்காய்வு அறிக்கையில் கவனத்தினைச் செலுத்த

வேண்டியதுடன், அவ் வெளிப்படுத்துதல்கள் போதுமானளவு அல்லாதாயின் எனது அபிப்பிராயத்தினை திருத்துதல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகளின் மீது தொடர்ச்சியான நிலவுகை முடிவடைய இயலும்.

- நிதிக் கூற்றுக்களின் சட்டகம் மற்றும் உள்ளடக்கங்கள் தொடர்பாக அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல் மற்றும் சம்பவங்கள் உகந்தனவாக மற்றும் நியாயமாக உள்ளடக்கப்பட்டுள்ளனவென மற்றும் வெளிப்படுத்தப்படுதல்கள் உள்ளடங்கிய நிதிக் கூற்றுக்களின் மொத்த சமர்ப்பிப்பு மதிப்பாய்வு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வினுள் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டுப் பலவீனம் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக ஆளுகை செய்யும் தரப்பினர் அறிவூட்டப்பட்டனர்.

2. <u>வேறு சட்டரீதியான மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகள் தொடர்பான அறிக்கை</u>

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழ்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன

2.1.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம், கணக்காய்வு தொடர்பாக அவசியமான சகல தகவல்கள் மற்றும் விளக்கமளித்தல்கள் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், எனது பரிசோதனையின் வாயிலாக தெரியக் கூடியதாக உகந்த நிதி அறிக்கைகள் நிதியத்தினால் பேணிச் செல்லப்பட்டுள்ளன.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (III) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம் நிதியத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் முற்போந்த வருடத்துடன் ஒத்திருக்கின்றன.

2.1.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (IV) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம் முற்போந்த வருடத்தில் என்னால் நிகழ்த்தப்பட்ட விதப்புரைகள், சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுக் காணப்படுகின்றன.

2.2. கடைப்பிடிக்கப்பட்ட செயல்வழிகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் மற்றும் பொருண்மையான விடயங்களுக்குள் எல்லைப்படுத்துதலின் வாயிலாக, கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கூற்றுக்களைத் தெரிவிக்கும் அளவிற்கு எந்தவொன்றும் எனது கவனத்திற்குள் ஈர்க்கப்படவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் நிதியத்தின் ஆளும் குழுவின் யாதேனும் உறுப்பினர் ஒருவருக்கு நிதியத்துடன் தொடர்புபட்டு யாதேனும் ஒப்பந்தம் தொடர்பாக நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ பொதுவான வர்த்தக நிலைமைகளுக்கு அப்பால் தொடர்பு உள்ளது என.

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள

அவதானிப்புக்களைத் தவிர யாதேனும் ஏற்புடைய எழுதப்பட்ட சட்டங்கள் அல்லது நிதியத்தின் ஆளும் குழுவால் வெளியிடப்பட்டுள்ள வேறு பொது அல்லது விஷேட பணிப்புகளுக்கு இணங்கியொழுகாது செயற்பட்டுள்ளது என.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள்	விபரம்
(அ) இலங்கை சனநாய சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்	
(i) நிதிப்பிரமாணம் 571	2 வருடங்களைக் கடந்த மொத்தம் ரூ. 260,000 பாதுகாப்பு 26 பிணை வைப்புகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக் கப்படவில்லை.
(ii) நிதிப்பிரமாணம் 877 (1) (ஈ) பந்தி	2021 ஆம் வருடத்தில் தேசிய விளையாட்டு நிதியத்தின் பாதீடு தொடர்பாக திறைசேரியின் அனுமதி பெறப்பட்டிருக்கப்படவில்லை.
(iii) நிதிப்பிரமாணம் 877 (2) (ஈ) பந்தி	மீளாய்வு வருடம் தொடர்பாக தேசிய விளையாட்டு நிதியத்தின் செயலாற்றுகை அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்கப்படவில்லை.
(ஆ) இலங்கை சனநாய சோஷலிசக் குடியரசின் தாபனக் கோவை ix ஆம் அத்தியாயத்தின் 1.2	மீளாய்வு வருடத்தின் போது தேசிய விளையாட்டு நிதியத்தின் நிர்வாக நடவடிக்கைகளின் பொருட்டு விளையாட்டு அமைச்சின் உத்தியோகத்தர்கள் 08 பேரின் பொருட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூ. 363,500 ஆன கொடுப்பனவு மற்றும் உயர் செயலாற்றுகை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள் 03 பேருக்குக் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூ. 1,500,000 ஆன விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள் கொடுப்பனவு என்பன தொடர்பாக நிறுவனப் பணிப்பாளரின் அனுமதி பெறப்படாது அமைச்சர் அவர்களின் அனுமதியின் அடிப்படையில் மாத்திரம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது,

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் நிதியத்தின் அதிகாரங்கள், பணிகள் மற்றும் கடமைகள் என்பனவற்றிற்கு இணங்கியொழுகாது செயற்பட்டுள்ளது என.

2.2.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் நிதியத்தின் வளங்கள் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் மற்றும் விளைதிறனாகவும் காலவரையறைகளினுள் ஏற்புடையற்பாலனவான சட்டங்கள், விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயனபடுத்தப்படவில்லை என.

2.3 <u>ஏனைய விடயங்கள்</u>

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க தேசிய விளையாட்டுச் சட்டத்தின் 22 ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கையில் விளையாட்டுக்களுக்கு தைரியத்தினை வழங்கள், அவற்றை மேம்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் தொடர்பாக தேசிய விளையாட்டு நிதியமானது தாபிக்கப்பட்டிருந்தது. அதனடிப்படையில் கடந்த நான்கு வருட காலத்தினுள் தேசிய விளையாட்டு நிதியத்தின் வாயிலாக வழங்கப்பட்டிருந்த பங்களிப்பின் பிரகாரம் இலங்கை விளையாட்டுத்துறையினுள் பெற்றுக் கொண்ட வெற்றிகள் சம்மந்தமாக இதுவரையில் பங்குபற்றிய 19 ஒலிம்பிக் விளையாட்டு விழாக்களில் 02 வெள்ளிப் பதக்கங்களை மாத்திரம் வெற்றிகொண்டிருந்ததுடன் பொதுநலவாய நாடுகளுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டித் தொடர்களின் போது 2014 ஆம் வருடம் வெள்ளிப் பதக்கமொன்றினையும் அத்துடன் 2018 ஆம் வருடத்தில் இலங்கையானது வெள்ளிப் பதக்கமொன்றினையும் மற்றும் 5 வெண்கலப் பதக்கங்களையும் வெற்றிகொண்டமை உயர் வெற்றியாயினும், 2022 ஆம் வருடமாகும் போது அது வெள்ளிப் பதக்கமொன்றாகவும் மற்றும் 3 வெண்கலப் பதக்கங்களாகவும் கீழிறங்கியிருந்தது. மேலும் 2014 ஆம் வருடத்தின் போது கிரிக்கட் போட்டி தொடர்பாக தங்கப் பதக்கமொன்றும், மகளிர் கிரிக்கட் போட்டி தொடர்பாக வெள்ளிப் பதக்கமொன்றும் வெற்றிகொள்ளப்பட்டிருந்ததுடன் 2018 ஆம் வருடத்தில் எந்தவொரு பதக்கமும் வெற்றிக் கொள்ளப்பட்டிருக்கப்படவில்லை.

(ஆ) மீளாய்வு வருடத்தில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் வருடாந்தம் விளையாட்டு வீர வீராங்கனைகளின் போசணை நிலைமையினை மேலுயர்த்துதல் மற்றும் விளையாட்டு இயலுமைகளை உயர்த்துவதனை நோக்கமாகக் கொண்டு நிதியத்தின் பணிகளை மேற்கொண்டு செல்லுவதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு இருப்பினும் ரூ. 200,182,563 மொத்தச் செலவினத்தில் நூற்றுக்கு 2 வீதம் ரூ. 4,050,000 மாத்திரம் விளையாட்டு வீர வீராங்கனைகளின் போசணை நிலைமையினை மேலுயர்த்துவதன் பொருட்டு செலவழிக்கப்பட்டிருந்தது. அதனடிப்படையில் மீளாய்வு வருடத்தினுள் விளையாட்டு வீர வீரர்களின் போசணை நிலைமையினை மேலுயர்த்துதல் தொடர்பாக போதுமானளவு கவனஞ் செலுத்தப்பட்டிருக்கப்படவில்லை என அவதானிக்கப்பட்டுள்ளது.

(இ) இலங்கையில் விளையாட்டுப் புலமைகளை விருத்தி செய்து சர்வதேச ஆற்றுகைகளை இலக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள உயர் ஆற்றுகையுடன் கூடிய 60 விளையாட்டு வீர வீராங்கனைகளின் பொருட்டு மாதாந்தம் ரூ. 25,000 உடைய போசணைப் பையொன்றினை அன்பளிப்புச் செய்வதற்கு ஏற்புடையதாக அனுசரணையினை வழங்குவதற்கு தனியார் நிறுவனமொன்று இணக்கத்தினைத் தெரிவித்து ரூ. 9,000,000 ஆனது தேசிய விளையாட்டு நிதியத்திற்கு வைப்புச் செய்யப்பட்டிருந்தது. இப் பணியின் பொருட்டு அனுசரணை நிறுவனம் மற்றும் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம் என்பவற்றிற்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கப்படவில்லை. விளையாட்டு வீரர்களுக்குப் பெற்றுக் கொடுக்கப்படும் போசணைக் கொடுப்பனவின் வாயிலாக விளையாட்டு வீரர்கள் பெற்றுக் கொள்ள வேண்டிய போசணை கொண்ட உணவு வகைகள் பற்றி போசணைவியலாளர்களின் ஆலோசனைகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கப்படவில்லை என்பதுடன் இக் கொடுப்பனவின் வாயிலாக விளையாட்டு வீரர்களின் போசணைத் தேவைகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளதா என்பது பற்றி பின்னூட்டல் ஒன்றினை மேற்கொள்ளும் முறைமையியல் ஒன்றும் கடைப்பிடிக்கப்பட்டிருக்கப்படவில்லை. விளையாட்டு வீரர்களின் போசணைக் கொடுப்பனவினை

மேற்கொள்ளுவதன் பொருட்டு இந் நிதி அனுசரணை பெற்றுக் கொடுக்கப்பட்டிருப்பினும் அதற்கு மேலதிகமாக உயர் செயலாற்றுகை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வெளிநாட்டில் விளையாட்டுப் பயிற்சியினைப் பெறும் விளையாட்டு வீரர்கள் இருவர் தொடர்பாக ஊக்குவிப்புக் கொடுப்பனவாக ரூ. 4,165,007 ஆனது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இதனடிப்படையில் அனுசரணை நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட ரூ. 09 மில்லியன் தொகையிலிருந்து ஏற்புடைய விடயம் தொடர்பாக 54 விளையாட்டு வீரர்களுக்கு 03 மாத காலம் தொடர்பாக ரூ. 4,050,000 மாத்திரம் செலவழிக்கப்பட்டிருந்தது.

(ஈ). 2020 டோக்கியோ பராலிம்பிக் போட்டித் தொடரின் போது தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களை வெற்றிகொண்ட இரண்டு விளையாட்டு வீரர்கள் மற்றும் அவர்களது பயிற்றுவிப்பாளர்களுக்கு தேசிய விளையாட்டுச் சபையின் பரிந்துரையின் பிரகாரம் பணப்பரிசில்களை பெற்றுக்கொடுப்பதற்கு அமைச்சரவை அனுமதியின் பிரகாரம் திறைசேரியினால் ரூ. 96 மில்லியன் நிதியேற்பாடு பெற்றுக்கொடுக்கப்பட்டு ரூ. 91,125,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருப்பினும் அதற்கு அப்பால் அமைச்சரவை தீர்மானத்தில் குறிப்பிடப்படாத விசேட திறன்களைக் காட்டியுள்ள மேலும் 05 விளையாட்டு வீரர்கள் மற்றும் அவர்களது பயிற்றுவிப்பாளர்களுக்கு ரூ. 8,125,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(உ). மாத்தறை கம்புறுபிட்டிய குத்துச்சண்டை விளையாட்டு அரங்கு தொடர்பாக கட்டிடம் ஒன்றினை ஒழுங்கமைத்தல் மற்றும் வொலிபோல் விளையாட்டு மைதானத்தினை அபிவிருத்தி செய்யும் செயற்றிட்டம் தொடர்பாக 2020 ஆம் வருடத்தில் தேசிய விளையாட்டு நிதியத்தின் வாயிலாக மாத்தறை மாவட்டச் செயலகத்திற்கு ரூ. 9,157,992 வழங்கப்பட்டிருந்ததுடன் மொத்தச் செலவினம் ரூ. 7,265,483 ஆனதனால் எஞ்சிய தொகையான ரூ. 1,892,509 மாத்தறை மாவட்டச் செயலகத்தின் பொது வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருப்பினும் நிதியத்திற்கு மீளப் பெற்றுக்கொள்ளுவதற்கு இது வரையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கப்படவில்லை. மேலும், செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்தி கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் சிட்டைகள் மற்றும் கொடுப்பனவு வவுச்சர் பிரதிகள் மற்றும் வேலைகளை முடிவுறுத்தல் அறிக்கைகள் உள்ளடங்கிய அச் செயற்றிட்டத்தின் வளர்ச்சி சம்மந்தமான அறிக்கை நிதியத்திற்குப் பெற்றுக் கொள்ளுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கப்படவில்லை.

(ஊ). தற்போது நிலவும் விளையாட்டுப் பாடசாலைகளுக்கு பௌதிக வளங்களைப் பெற்றுக் கொடுத்தல் சம்மந்தமாக விளையாட்டுப் பொருட்கள் அதனுடன் அடிப்படை உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கும் மற்றும் போக்குவரத்திற்குமாக விளையாட்டு நிதியத்தின் வாயிலாக கல்வியமைச்சின் செயலாளருக்கு 2020 ஆம் வருடம் ரூ. 5,000,000 ஆனது வழங்கப்பட்டிருந்தது. இந் நிகழ்ச்சித் திட்டத்தினை அமுல்படுத்தியதன் பின்னர் அதன் வளர்ச்சி 2020 ஆகஸ்ட் 31 ஆம் திகதிக்கு முன்னர் விளையாட்டு அமைச்சிற்கு அறிக்கையிடும்படி கூறப்பட்டிருப்பினும் இக் கொள்வனவு மற்றும் உபகரணங்களை விநியோகித்தல் பற்றி தகவல்கள் மற்றும் வளர்ச்சி அறிக்கை பெறப்பட்டிருக்கப்படவில்லை என்பதுடன், ரூ. 4,644,600 பெறுமதி தொடர்பாக மாத்திரம் விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(எ). பொதுநலவாய நாடுகளுக்கு இடையிலான விளையாட்டு விழா மற்றும் ஆசிய விளையாட்டு விழா என்பனவற்றை இலக்காகக் கொண்டு உயர் செயலாற்றுகை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விளையாட்டு வீரர்களின் இயலமைகளை விருத்தி செய்து ஏற்புடைய போட்டிகளில் வெற்றிகொள்ளும் எதிர்பார்ப்புடன் 06 விளையாட்டுக்கள் தொடர்பாக தெரிவுசெய்துகொள்ளப்பட்ட விளையாட்டு வீரர்கள் மற்றும் பயிற்றுவிப்பாளர்கள் தொடர்பாக தேசிய விளையாட்டு நிதியத்தின் வாயிலாக 2021 ஆம் வருடம் மார்ச் மாதத்திலிருந்து டிசம்பர் வரையில் ரூ. 75,215,000 கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது. இக் கொடுப்பனவினைச் செய்யும் போது 60 விளையாட்டு வீரர்கள் மற்றும் 32 பயிற்றுவிப்பாளர்களைத் தெரிவு செய்யும் போது கடைப்பிடிக்கப்பட்ட முறைமையியல் மற்றும் அதற்கு ஏற்புடைய நியதிகள், விளையாட்டு வீரன் ஒருவன் தொடர்பாக ரூ. 100,000 மற்றும் பயிற்றுவிப்பாளர் ஒருவர்

தொடர்பாக ரூ. 50,000 ஊக்குவிப்புத் தொகையினைத் தீர்மானிப்பதற்கு அடிப்படையாக அமைந்த விடயங்கள், கொடுப்பனவினை மேற்கொள்ளுவதனைத் தீர்மானிப்பதற்கு முன்பதாக இவ் விளையாட்டு வீரர்கள் மற்றும் பயிற்றுவிப்பாளர்கள் தொடர்பாக விளையாட்டு அமைச்சு, விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம், தேசிய ஒலிம்பிக் கமிட்டி மற்றும் விளையாட்டுச் சங்கங்களால் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த வேறு நன்மைகள் பற்றிய மதிப்பாய்வு, விளையாட்டு வீரர்கள் மற்றும் பயிற்றுவிப்பாளர்களது மாதாந்த செயற்சாதனையினை மதிப்பிடும் முறைமையியல் ஒன்றினைத் தயாரித்தல் என்பனவற்றுடன் விளையாட்டு வீரர்கள் மற்றும் பயிற்றுவிப்பாளர்களுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ளுவதற்கு நிதியத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கப்படவில்லை.

(ஏ). உயர் செயற்சாதனை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கொடுப்பனவினைப் பெற்றுக் கொண்ட 35 விளையாட்டு வீரர்கள் பொதுநலவாய நாடுகளுக்கு இடையிலான விளையாட்டு விழாவின் பொருட்டு தெரிவுசெய்யப்பட்டிருக்கப்படவில்லை என்பதுடன், விளையாட்டு விழாவின் பொருட்டு அனுமதி கிடைக்கப்பெற்ற 14 விளையாட்டு வீரர்கள் தொடர்பாகக் கொடுப்பனவானது வழங்கப்பட்டிருக்கப்படவில்லை. இதன் பிரகாரம் உயர் ஆற்றுகையினை வெளிக்காட்டி பதக்கங்களைப் பெற்ற சில விளையாட்டு வீரர்களின் பொருட்டு இக் கொடுப்பனவானது வழங்கப்பட்டிருக்கப்படவில்லை என அவதானிக்கப்பட்டுள்ளது.

(ஐ). தேசிய ஒலிம்பிக் கமிட்டியினால் 2021 ஆம் வருடம் ஆறு மாத முழுப் புலமைப்பரிசிலின் அடிப்படையில் பயிற்சி நடவடிக்கைகளின் பொருட்டு வெளிநாட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த விளையாட்டு வீரனொருவனுக்கு உயர் செயற்சாதனை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 10 மாத காலம் தொடர்பாக ரூ. 1,000,000 கொடுப்பனவொன்றும் அத்துடன் ரூ. 75,000 போசணைக் கொடுப்பனவும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக வெளிநாட்டில் பயிற்சி பெறும் மற்றுமொரு விளையாட்டு வீரனொருவனுக்கு 03 மாதங்கள் தொடர்பாக ரூ. 300,000 உம் எஞ்சிய 07 மாதங்கள் தொடர்பாக 1500 அமெரிக்க டொலர்கள் வீதம் ரூ. 2,082,946 உம் தேசிய விளையாட்டு நிதியத்தின் வாயிலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருப்பினும் அவ் விளையாட்டு வீரர்கள் இருவரும் தனிப்பட்ட காரணங்கள் எனக் காட்டி 2022 பொதுநலவாய நாடுகளுக்கு இடையிலான விளையாட்டு விழாவினை பிரதிநிதித்துவப்படுத்தியிருக்கவில்லை.

(ஒ). இலங்கையின் விளையாட்டு வீரர்கள் தேசிய ரீதியாகவும் மற்றும் சர்வதேச ரீதியாகவும் பெற்றுக்கொள்ளும் ஆற்றுகைகள், தரப்படுத்துதல்கள் மற்றும் வெற்றிகள் சம்மந்தமாக தரவுத் தொகுதியொன்றினை பேணிச் செல்லுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கப்படவில்லை.

(ஓ). 2018 மற்றும் 2019 ஆம் வருடங்களில் நிலவிய பற்றாக்குறை ஒழுங்குமுறையாக ரூ. 26,110,111 உம் மற்றும் ரூ. 6,495,405 உம் ஆகக் காணப்பட்டதுடன் 2020 ஆம் வருடமாகும் போது ரூ. 49,928,743 வருமானத்தினை விட மூன்று மடங்கான ரூ. 127,717,485 செலவினம் காணப்பட்டமையின் காரணத்தினால் ரூ. 77,788,742 நிதிப் பற்றாக்குறையானது காணப்பட்டது. இம் மூன்று வருடங்களிலும் நிதிச் செயலாற்றுகையினுள் பின்னடைவு காணப்படினும் 2021 ஆம் வருடத்தில் வருமானமானது ரூ. 212,649,115 உம் அத்துடன் செலவினம் ரூ. 200,182,563 உம் ஆக இருந்ததனால் ரூ. 12 மில்லியனுக்கு அதிகமான மிகையானது அண்மித்துக் கொள்ளப்பட்டிருந்தது.

W.P.C. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி